DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT (FTC), THENI.

# OS . No. 246/2021

Deposition of Witness : PW1

| | |
|---|---|
| Name - கனிஷ்கர் | Father's Name - ஜோதிகணேசன் |
| Village\City - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.04.2023.

(சாட்சி அழைக்கபட்டு சத்தியபிரமாணம் செய்யபட்டார்)

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்

**3 வது பி.வா.கு.வி.:**

கேள்வி : பிரதிவாதியின் தாயார் வெள்ளத்தாய் உங்கள் தாத்தா விஸ்வநாதன் மீது அ.வ.எண் 37/2009 வழக்கை தாக்கல் செய்து அது வாதியின் வருகையின்னை காரணமாக தள்ளுபடி ஆனதாக சொல்லி வா.சா.ஆ 4 தாக்கல் செய்து உள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அ.வ.எண் 37/2009 ல் உங்கள் தாத்தா வழக்கறிஞர் வைத்து எதிர்வாதம் செய்து வந்தார் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அவருடைய எதிர் வாதத்தில் வெள்ளைத்தாய்க்கும் விஸ்வநாதனுக்கும் இடையில் ஏற்பட்ட கிரைய அக்ரிமெண்ட் சம்பந்தமாக விபரங்ள் ஒப்புக் கொண்டு உங்கள் தாத்தா எதிர்வாதம் செய்தார் என்றால்?

பதில் : அது பற்றி எனக்கு தெரியாது.

கேள்வி : அ.வ.எண் 37/2009 வழக்கில் உங்கள் தாத்தா என்ன எதிர்வாதம் செய்தார் என்பது தெரியாமல் தான் இந்த பிராதும் , முதல் விசாரணையிலும் சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : வா.சா.ஆ 4 க்கு பின்பு தான் வா.சா.ஆ 1 கிரைய ஆவணம் ஏற்பட்டுள்ளது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : அ.வ.எண். 37/2009 வழக்கில் உங்கள் தாத்தா வெள்ளைத்தாயிடம் ரூ25,00,000/– பணம் பெற்று அதற்கு ஏற்படுத்திய கிரைய அக்ரிமெண்ட் பற்றிய விபரங்களையும் அதன் அடிப்படையில் ஏற்பட்ட வழக்கு மற்றும் அதில் உள்ள எதிர்வாதம் பற்றியும் தெரிந்து கொண்டே இந்த வழக்கிற்காக அந்த வழக்கை பற்றி எந்த விபரமும் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : இந்த வழக்கு பிராது, மற்றும் உங்கள் விசாரணை சம்பந்தமாக சங்கதிகள் அனைத்தும் வழக்கறிஞருக்கு சொன்னது நீங்கள் தான் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்களுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் பாரா நம்பர் 18 ல் அ.வ.எண் 37/2009 ல் உங்கள் தாத்தா எதிர்வாதம் செய்த சங்கதியை கூறியுள்ளீர்கள் என்றால் ?

பதில் : ஒரு எதிர்வாதம் பற்றி கூறியுள்ளேன்.

கேள்வி : வா.சா.ஆ 4 ல் கண்ட வழக்கில் உள்ள கிரைய ஒப்பந்தத்தில் உங்கள் தாத்தாவுடன் உங்கள் பாட்டி சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றால்?

பதில் : தவறு.

கேள்வி : உங்கள் தாத்தா செந்தில் என்பவரிடம் உங்கள் தாத்தா எழுதி கொடுத்த 4 பிரமசேரி நோட்டுகளிலும், உங்கள் தாத்தா எழுதி கையெழுத்து போட்டு அதில் உங்களுடைய பாட்டி, உங்களுடைய பெற்றோர் ஆகியோர்கள் கையெழுத்து இட்டார்கள் என்றால்?

பதில் : தவறு. என் தாத்தா அந்த மாதிரி கடன் எதுவும் வாங்கவில்லை.

கேள்வி : அ.வ.எண் 37/2009 வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை படித்து பார்த்து வந்து சாட்சி சொல்ல தயாராக உள்ளீர்களா என்றால்?

பதில் : ஆவணம் கிடைத்தால் தயார்.

கேள்வி : நீங்கள் அந்த ஆவணத்தை 3 ம் பிரதிவாதி தரப்பில் கொடுத்தால் பெற்று , படித்து சாட்சி சொல்ல முடியுமா என்றால் ?

பதில் : முடியும்.

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்டுகிறது .

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 21.04.2023 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN Digitally signed by S GOPINATHAN Date: 2023.04.21 19:11:36 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
21.04.2023.